RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1967

# தமிழ் இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

கா. சௌந்தரராஜன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீதேவி கலை மற்றும் அறிவியல் கல்லூரி கிருஷ்ணாபுரம், பொன்னேரி-601204, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Thoughts in Tamil Literature

K. Soundararajan [a, *]

[a] Department of Tamil, Sridevi Arts and Science College, Krishnapuram, Ponneri-601204, Tamil Nadu, India

* Corresponding Author: moukshikashivani@gmail.com

Received: 01-07-2022
Revised: 20-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Tamil has now been accepted as the supreme classical language by the Government of India. Considering that we are happy and praising ourselves. But at the same time, only few people know that the original source of Tamil language is Sangam literature, which has given the status of a supreme classical language to Tamil language. Questions arise whether we are clear with the various dimensions of Sangam literature and the different platforms they operate on. Sangam literature written by many writers and Valluvar's Thirukkural guides man to live a good life in this world. There are many moral ideas in these books. Among them educational wealth and material wealth are the basis of individual and social development. Sangam literature emphasizes that all these qualities should be attained by every human being.

**Keywords:** Virtue, Wealth, Virtue Definition, Meaning of Life, Social Virtue, Honor Virtue of Family Management.

## முன்னுரை

தமிழ்மொழி எப்பொழுதும் உயர்தனிச் செம்மொழியாக இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனை எண்ணி நாம் அனைவரும் இரும்பூது எய்துகின்றோம். நம்மை நாமே பாராட்டிக் கொள்கிறோம். ஆனால் அதே வேளையில் இம்மொழிக்குச் செம்மொழி தகுதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ள பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களைத் தமிழ்மொழியின் மூலப் பண்டாரத்தை நாம் முற்றிலும் அறிந்து கொண்டுள்ளோமா? அவ்விலக்கியங்களின் பல்வேறு பரிமாணங்களையும் அவை இயங்கும் மாறுபட்ட தளங்களையும் நாம் விளங்கிக் கொண்டுள்ளோமா என்னும் வினாக்கள் எழுகின்றன.

மனிதன் இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டும் வகையில் ஆன்றோர் படைத்த நூல்களுள் வள்ளுவரின் திருக்குறளையும், சங்க இலக்கியத்தையும் கூறினால் மிகையாகாது. அந்நூல்கள் வழங்கிய கருத்துகள் பல. அவற்றுள் தனிமனித வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவன கல்விச் செல்வமும், பொருட்செல்வமும் ஆகும். அச்செல்வங்களை இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் பெற வேண்டியதன் அவசியத்தைச் சங்க இலக்கியம் வலியுறுத்துவதை காணலாம்.

மனித மாண்பை அடித்தளமாகக் கொண்டது இலக்கியம், மனித வாழ்வையும், மனித உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டி நன்னெறிக்கண் நெறிப்படுத்துவது இலக்கியம். சங்க இலக்கியம் மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்குரிய அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைப்பது

அடுக்கிச் சொல்வது சங்க இலக்கியமாகாது. இலக்கியத் தகுதியுடனும், சுவையுடனும், கலையழகு குன்றாத நிலையில் அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைக்கும்போது அது சங்க இலக்கியமாகிறது.

இன்றைய சமுதாயத்தில் மனிதப்பிறவி வாழ்வாங்கு வாழ அறவழிப்பாதை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு தனிமனித வாழ்க்கைக்கு அறநெறி அல்லது ஒழுக்க நெறி என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஒழுக்க நெறியின் மாற்று வடிவமே அறநெறியாகும். நாம் விண்ணுலகத்தில் சொர்க்கப் பயனை அனுபவிக்க, மண்ணுலகில் அறநெறியின் கீழ் செயல்பட வேண்டும் என்பது எம் முன்னோர்களின் வாக்கு. இதன் காரணமாகவே "அறம் செய்ய விரும்பு" என்று ஔவையார் தனது ஆத்திச்சூடியில் குறிப்பிட்டுள்ளார்.

## அறம் விளக்கம்

அறம் என்றால் என்ன? என்ற வினா எழுப்பினால் அதற்கு விடைக் காண்பது கடினமானது. அறம் என்ற சொல்லின் பொருள் என்ன? 'அறு' என்ற வினைச் சொல் அடியாகப் பிறந்த 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம்.

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுகின்றனர். 'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறித்தெறிவதே அறம்' என்று ஆன்மீக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு (Padmadevan, 2013).

நீதி நூல்களில் தலையாயதாகக் கருதப்படும் திருக்குறள் அறத்தை 'இல்லறம்', 'துறவறம்' என்று பகுத்துள்ளது. நாலடியாரிலும் இவ்வகைப் பகுப்பு முறையே காணப்படுகின்றது.

## வாழ்க்கைக்கு அர்த்தம்

பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று இருப்பதா வாழ்க்கை? வாழ்க்கைக்கு அர்த்தம், நோக்கம் என்று ஒன்று இல்லாமல் போகலாம். இந்த வாழ்க்கையை எப்படி வாழ்வது. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஏதாவது விதி இருக்கிறதா? எப்படி வாழ்ந்தால், வாழ்ந்த திருப்தி இருக்கும்?

ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொன்று தோன்றுகிறது. குழந்தையாக இருக்கும்போது அப்புறம் சிறுவன்/சிறுமியாக இருக்கும்போது, பின் வாலிபன், இளம் பெண்ணாக இருக்கும்போது, மணம் முடித்தபின், பிள்ளைகள் வந்தபின்... வயதானபின் என்று வாழ்வின் நோக்கங்களும், அர்த்தங்களும், வழிகளும் மாறிக் கொண்டே இருக்கிறது.

ஒரு காலகட்டத்தை விட்டு அடுத்ததற்கு போகும்போது முந்தைய காலகட்டத்தில் நாம் உயர்ந்தது, சிறந்தது, முக்கியமானது என்று நினைத்தது எல்லாம் நகைப்புக்கு இடமாகிப் போகிறது. சொப்பு சட்டியும், பொம்மைகளும் இளைஞனுக்கு அர்த்தம் இல்லாததாகத் தெரிகிறது. காதலும், அதன் வசீகரங்களும் வயதான கிழவனுக்கு அர்த்தம் இன்றி தோன்றுகிறது. பின் எதுதான் சாஸ்வதம்?

அவ்வையார், நான்கே நான்கு சொற்களில் மொத்த வாழ்க்கையையும் அடக்கி விட்டார். அறம் பொருள் இன்பம் வீடு பேறு. எது அறம்? பொருளை எப்படி சேர்க்க வேண்டும்? இன்பம் என்றால் என்ன? எப்படி முக்தி அடைவது?

"ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

இனி அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்ப்போம் (Avvaiyar, 2015). செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும், செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அறமாகும். மன மாசு என்பது யாது? மன மாசினைப் போக்குவது எவ்வாறு? பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை மன மாசுகளாகும். அவை இல்லாமல் இருப்பதே அறம். இதை தெய்வப்புலர்

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" (Padmadevan, 2013)

"பகல் எரி சுடரின் மேனி சாயவும்

பாம்பு ஊர்மதியின் நுதல் ஒளி கரப்பவும்

எனக்கு நீ உரையாயாயினை நினைக்குயான்

உயிர் பகுத்தனன் மாண்பினன் ஆகலின்”

குறிஞ்சித் திணையில் தோழிக்குத் தலைவி அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்துள்ள, பாங்கியற் கூட்டத்தில் தலைமகளின் குறையைத் தீர்ப்பதற்கு தோழி முற்படுகின்றாள். ஆதனால் அவள் தலைவியிடம் ‘நின் மேனி வாடிற்று நெற்றி ஒளி குன்றிற்று ஆனால் அவற்றின் காரணத்தை நீ உரைக்கவில்லை. ஆயினும் நான் அறிவேன் என்கிறாள். அதற்குத் தலைவி, நீ வருத்தப்படாதே திணைப்புனத்தில் தலைவன் என் முதுகை அணைத்தான் அதனால் அவ்வாறு இருக்கிறேன் என்று தோழியிடம் நயமாகக் கூறித் தன் ஒழுக்கம் குன்றாதவாறு அறத்தோடு நிற்கிறாள் (Dhatchanamoorthi, 2005).

தலைவன் பரத்தையிற் பிரிந்து சென்றாலும் தலைவியின் மேல் கொண்ட காதலால் தலைவியிடம் சேர நினைக்கின்றான். அப்பொழுது தலைவி ஏற்றுக் கொள்ள மாட்டாளோ என்ற பயந்து விருந்தினனை வீட்டிற்கு அழைத்து வருகின்றான்.

“அன்னை வாழி! வேண்டு அன்னை! புன்னையொடு

ஞாழல் பூக்கும் தண்ணந் துறைவன்

இவட்கு அமைந்ததனால் தானே

துனக்கு அமைந்தன்று, ஈவன் மாமைக் கவினே”

தலைவியின் கற்புக்கு எவ்வித பங்கமும் நேரவில்லை (Dhatchanamoorthi, 2005). தலைவன் தலைவியை கைவிடான் இனி தலைவனுக்கே உரியது என எடுத்துக் கூறுகிறாள். வினையின் காரணமாக நீங்கிச் செல்லும் தலைவன் தான் வருவதாக கூறிச் சென்ற கார்ப்பருவம் வருவதற்கு முன்னதாக வந்தான் தலைவன்.

“அகல்வாய் வானம்மால் இருள் பரப்ப,

பகல் ஆற்றுப்படுத்த பையென் தோற்றமொடு

சினவல் போகி புன்கண் மாலை,

அந்த நடுகல் ஆள் என உதைத்த

கான யானை கதுவாய் வள்உகிர்”

காட்டு யானையாவது பாலை வழியில் உள்ள நடுகல்லை ஆள் என நினைத்து உதைத்தமையால் வளவிய பெருநகம் சிதைவுற்று பனை நுங்கின் தோடு போல முறிந்து விழும் அருளிலாக் கொடுமையுடைய ஆரலைக் கள்வர் கொள்ளைக் கொள்வதற்குப் பதுங்கிக் கிடக்கும் இடத்தே காட்டின் கொடுமையால் வருவார் போவார் இன்மையால் தம் வறுமையை நீக்குவாரைக்

காண மாட்டாத இடமான கொடிய சுரவழி அம்மாலைக் காலத்தே நின்று தலைவியை நினைத்து தலைவன் வருந்துகின்றான் (Balasubramanian, 2006).

குடும்ப வாழ்க்கையில் மட்டுமின்றி, அரசியலிலும் மக்களைப் பேணிக் காப்பதிலும் தமிழர்க்கு நிகர் தமிழர்தான் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. அதில் புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு பண்பாட்டுக் களஞ்சியம், இலக்கிய கருவூலம். இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்தியை புரவலர்கள் புலவர்களை போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளும் மன்னர் தம் மானப் பண்பு பற்றி அறிய குறிப்புகளும், போர்த் திணவுற்று அறமுறைப் பிறழாது போர் புரிந்து, மார்பில் வேலேற்ற மைந்துடை காளையரின் வீரப் பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான சால்புகளும், களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதமெய்திய தாயாரின் மறக்குணங்கள் பிறவும் புறநானூற்றில் மிக அழகுற எடுத்துரைக்கப் பெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் போருக்குச் செல்லும் அரசர்களும் அறத்தோடு நடந்துகொள்ளும் முறைமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சமூகம் சார்ந்த அறம்

தனிமனிதன் மேற்கொள்ளும் அறமே இறுதியில் சமுதாய அறமாக உருவெடுக்கிறது. சமுதாயத்தில் அனைத்து மக்களுடன் எவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பதும், அவ்வபோது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் விளக்குவதே சமூகம் சார்ந்த அறமாகும்.

"பல்சான் றீரே பல்சான் றீரே!

கயன்முள் என்ன நரைமுதிர் திரைகவுட்

பயனின் மூப்பிற் பல்சான் றீரே!

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்

பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ

நல்லது செய்த லாற்றீ ராயினும்

அல்லது செய்த லோம்புமி னதுதான்

எல்லாரு முவப்ப தன்றியும்

நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே"

நூல்கள் பலவும் கற்று நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்களாகத் திகழ்வதாக ஊரார் மெச்சும் சான்றோர்களே (Balasubramanian, 2004)! கெண்டை மீனின் முள்போல விறைத்து நிற்கும் நரைமுடியும், முதுமை எய்தியதால் கன்னங்களில் வரி வரியாகச் சுருக்கமும் ஏற்பட்டு பயன் இல்லாத முதுமையை அடைந்துவிட்ட சான்றோர்களே! உங்களுக்கு ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்!

இறப்பு உங்களைத் தழுவும் தருணத்தில், ஐயோ தவறு செய்து விட்டோம்! என்று வருத்தப்படுவதால் பயனில்லை! நீங்கள் பிறருக்கு நன்மை தரும் செயல்களைச் செய்யாவிட்டாலும் கூடப் பாதகமில்லை தீமை விளைவிக்கும் செயல்களைச் செய்யாமல் தவிர்த்திட வேண்டும். அதைத் தான் உலகம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. அதுமட்டுமின்றி, உங்களது பிறவிப் பயனை அடைவதற்கு இட்டுச் செல்லும் நன்னெறியும் அதுவொன்றேதான்!

"எனக்குத்தாய் ஆகியாள் என்னை ஈங்கு இட்டுத்

தனக்குத்தாங் நாடியே சென்றாள் - தனக்குத்தாய்

ஆகியவளும் அதுவானால் தாய்த் தாய்க் கொண்டு

ஏகும் அளித்துஇவ் வுலகு"

என்று நிலையாமை பண்பினைக் கூறுகின்றது (Padmadevan, 2013).

தொழுதுண்டு வாழ்தலினும் இரந்துண்டு வாழ்தலுக்கு அஞ்சுதல் வேண்டும். ஆகாதவர் பொருளின் மீது விருப்பம் கொள்ளலும் பொய்யுரை மொழிகளை விட்டொழித்தலுமே சிறந்த அறமாகப் போற்றப்படும்.

ஒரு செயலானது கை கூடுமெனினும் கைகூடாதெனினும் பிறர் பழித்தலில்லாத வகையில் செய்தல் வேண்டும் என்பதை,

"இசையும் எனினும் இசையா தெனினும்

வசைதீர எண்ணுவர் சான்றோர் - விசையின்

நரிமா உளங்கிழித்த அம்பினின் தீதோ

அரிமா பிழைப்பெய்த கோல்"

என்று கூறுகின்றது.

பிறரால் தமக்கு துன்பம் நேரினும், துன்பம் விளைவித்தவருக்கு இனிமையுடையவராகவே ஒழுகுதல் வேண்டும். தம்மைப் பற்றிப் பிறர் சொல்லும் கோளுரைக்குச் செவி மடுக்காமல் பெருந்தன்மையுடனும் செயலாற்ற வேண்டும் (Padmadevan, 2013).

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்"

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவர்க்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை (Namakkal Kavignar, 2002).

## செல்வம்

இரண்டு பாத்திரங்கள் உள்ளன. ஒன்று சுட்டது, மற்றொன்று சுடாதது. சுடாத பாத்திரம் மழையில் கரைந்து மீண்டும் அது உருவான மண்ணோடு மண்ணாகப் போய்விடுகிறது. அதுபோன்று தான் மனிதர்களும் இவ்வுடம்பு அழிந்தபின் தான் கடைபிடித்த விரதமும் ஞானமும் உடன் வரும் என்று,

"மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்

திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது

விண்ணின்று நீர்வீழின் மீண்டு மண்ணாற்போல்

எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாரேறு"

மிகுந்த செல்வம் பெற்றிருக்கிறோம் என்று அறியாமையினால் செருக்குற்றுத் திரிவர் சிலர் (Manikkavasagan, 2016). அவர்கள் வருந்தும்படி செல்வம் அவர்களை விட்டு நீங்கும். எப்படி தெரியுமா? இவர்கள் செல்வந்தர்களாய் இருந்தார்கள் என்ற அடையாளம் கூட இல்லாதபடி நீங்குமாம். இதற்கு இரவில் கரியமேகம் வெளிப்படுத்திய மின்னல், தோன்றி வேகத்தில் சுவடில்லாமல் அழியும். அடையாளமில்லாமல் அழிந்து போகும் என்ற உவமை,

"செல்வர்யாம் என்று செல்வுழி எண்ணாத

புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லில்

கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி

மருங்கறக் கெட்டு விடும்"

கல்வி ஏனைய செல்வங்களை விடவும் சிறப்புடைய செல்வமாக காணப்படுவதற்கு காரணம் அது "வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றி குறைவுறாது" என அழியாத செல்வம் கல்வியே. எனவே நாம் எப்போதும் நிலையான செல்வத்தை அடைந்து கொள்ள ஆவலாக இருக்க வேண்டும். "பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது" என்றார் மகாத்மா காந்தி அடிகள். ஆகவே அழியா சிறப்பை நாம் அனைவரும் உணர வேண்டும் (Padmadevan, 2013).

"செல்வத்துப் பயனே ஈதல்"

வீரத்தைப் போல ஈகையையும் தமிழ் இலக்கியங்கள் போற்றியது. ஈகையும் ஓர் அறச்செயலாகும். செல்வத்தின் பயன் கொடுத்து மகிழ்வதே என்று வாழ்ந்தனர் (Balasubramanian, 2004).

## மானம்

கண்ணகியின் தோற்றத்தையும், வழக்குறையையும் கண்டதுமே, பாண்டியன் நெடுஞ்செழியன், தான் தவறான தண்டனை வழங்கியது குற்றம் என உணர்ந்தான். அரசவையில் அவள் தன்னிடமுள்ள மற்றொரு காற்சிலம்பைத் தெறிக்கவிட்டு உண்மையைப் புலப்படுத்தியதும் தன் குலத்தின் மானம் போய்விட்டதே என தன் உயிரை அவ்விடத்திலேயே நீத்தான்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு போரில் தோல்வி அடைந்து சிறையிலிடப் பெறுகிறான். தனக்கு ஏற்பட்ட நீர்வேட்கை மிகுதியால் சிறைக்காவலரை நீர் தருமாறு கேட்கிறான். அவர்கள் காலந்தாழ்த்தி நீர் தருகின்றார்கள். அதை மானத்திற்குப் பெரும் இழுக்காகக் கருதினான். அதனால் நீரை அருந்தாமல் உயிர் துறக்கிறான் சேரமான் இரும்பொறை.

ஒருவன் எப்பொழுதும் உன்னை மதிப்பதில்லை. உடன் சேர்த்துக் கொள்வதுமில்லை. ஆனாலும் அவனை நம்பித்தான் உன் வாழ்வியல் உள்ளது என்ற நிலை வந்தால் அவனுடன் செல்லாமல் நல்ல நிலையிலே கெட்டழிந்தான் எனச் சொல்லப்படுதல் நல்லது என்று,

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே

கெட்டான் எனப்படுவது நன்று"

தலையிலிருந்து விழுந்த முடிக்கு என்ன மதிப்பு இருக்கும்? ஒன்றுமேயில்லை. யாவரும் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். அதுபோலவே மக்கள் தம் நிலையிலிருந்து தாழ்ந்து விட்டவரும் மதிப்பிழந்து செல்லாக் காசு ஆகிவிடுவர் என்கிறது (Namakkal Kavignar, 2002).

"தலையின் இழந்த மயிர் அனையர் மாந்தர்

நிலையின் இழிந்தக் கடை" (Namakkal Kavignar, 2002)

"மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை

பீடழிய வந்த இடத்து" (Namakkal Kavignar, 2002)

மானம் அழிந்த பிறகு உடனே உயிர் துறக்காமல், உடலை மட்டும் பாதுகாத்து வாழ்வது என்பது உயிரைக் காக்கும் மருந்து ஆகுமா?

## குடும்ப நிர்வாகத்திற்குரிய அறம்

குடும்ப நிர்வாகத்தில் அறம் என்பது ஒரு பகுதியன்று, வாழ்வு முழுவதுமே அறமாகும், எனவே தான் குடும்ப வாழ்க்கையை இல்லறம் என்றனர்.

குடும்பமானது, கணவன், மனைவி, அவர்தம் குழந்தைகள் இணைந்து நடத்தும் கூட்டமைப்பாகும். இந்த அன்பு வாழ்க்கையில் அறக்கருத்தினை இடையிடையே நினைவூட்டும் நாலாடியார் விளக்குகின்றது.

இல்வாழ்வில் தலைவன் மேற்கொள்ளும் அறமாவது, அழகும் நிறைந்த மனைவி தன் இல்லத்தில் இருக்க, பிறன்மனையை நோக்குதல் கூடாது. இவ்வறத்தினை மீறினால் நேரக்கூடியதை,

"அறம்புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்

பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன்தாரம்

நச்சிவார்ச் சேரும் பகை பழிபாவம் என்று

அச்சத்தோ டிந்நாற் பொருள்"

என்று வரையறை செய்கின்றது (Padmadevan, 2013).

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற வொழுக்கு"

பிறர் மனைவியை மனதில் தவறாக நினைப்பது, அவரை தவறாக பார்ப்பது, அவரிடம் தவறாக நடந்துக் கொள்வது ஒழுக்கமற்ற செயலாகும். அப்படி நடந்துக் கொள்ளாதிருப்பது ஒரு ஆண்மகனுக்கு மானத்திற்கு உரிய செயலாகும். அது அறம் மட்டும் இன்றி சான்றோர் என முழுமை அடைய தேவையான ஒழுக்கமாகும் (Namakkal Kavignar, 2002).

"உள்ளது சிதைப்போ ரளரெனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளவு"

என்பதை உணர்ந்து, பெரும் முயற்சியால் பொருளீட்டும் நோக்குடன் வாழ்வதே சிறந்த வாழ்வாகும் என்னும் நெறியை ஒவ்வொரு ஆடவனும் தெளிதல் வேண்டும் (Subramaniyan, 2012).

இல்லறமானது இனிமையுடன் திகழப் பொருட்செல்வம் மட்டும் போதாது. இல்லறத் தலைவியின் சிறந்த குணங்களால்தான் இல்வாழ்க்கையானது சிறப்புப் பெறும்,

"கட்கினியால் காதலன் காதல் வகை புனைவாள்

உட்குடையாள் உளர்நான் இயல்பினால் - உட்கி

இடனறிந் தூடி இனிதின் உணரும்

மடமொழி மாதராள் பெண்"

கற்புடை மகளிருக்கு நாணம் முதலிய பெண்மை இயல்புகளும், ஏனைய நலங்களும், தூய பண்புகளும் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது (Padmadevan, 2013).

"விருந்து புறம் தருதலும் சுற்றம் ஓம்பலும்

புறவு மன்னகிழவோள் மாண்புகள்"

என்று தொல்காப்பியரும், இல்லற நெறிகளை எடுத்தியம்புகின்றனர் (Mathaiyan, 2017).

மேலும், குடும்பப்பெண்ணானவள் தம் கணவன் மாட்டு அன்புடையவளாகவும், அவன் தவற்றினைப் பொறுத்துக் கொள்ளுபவளாகவும் திகழ வேண்டும்.

தலைமக்களின் அன்பு வாழ்க்கைக்கு அழகு சேர்ப்பது ஊடலும், கூடலுமாகும். எனவே,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்

கூடி முயங்கப் பெறின்"

என்னும் கருத்தினை நினைவில் கொண்டு இல்லறத்தை ஆற்ற வேண்டும் (Namakkal Kavignar, 2002).

## முடிவுரை

மனிதன் தன் வாழ்வில் அறத்தினைக் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். ஒழுக்கமுள்ள வாழ்வினை வாழ்ந்து வாழ்வில் வளம்பெற அறப்பண்புகளை நம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும். திருக்குறள், நாலடியார் முதலான அறநூல்களின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ள பாங்கினையும் நல்வழி காட்டும் தன்மையும் இந்நூல் முன்னூல் மரபு வழாது, இலக்கிய சிறப்பு குன்றாது எல்லாக் காலத்திற்கும், ஏற்றதாகிய மாறாத கருத்துக்கள், 'நல்லது-கெட்டது' 'தீங்கற்றது-தீங்கானது' என்ற தனிமனித உணர்வினைத் தாங்கிய மனிதாபிமான கோட்பாடு ஆகும். "இலக்கியம் அளிக்கும் இன்பம் நிலைபேறுடையதாக இருக்க வேண்டுமானால் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் அறநெறிக் கருத்துக்களும் அனுபவ உண்மைகளும் அதில் இடம்பெற்றுதான் ஆக வேண்டும். அப்பொழுது தான் அது வாழும் இலக்கியமாக விளங்க முடியும்" என்பதாகும்.

## References

Avvaiyar, (2015) Thanipadal moolamum uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2006) Agananuru, New Century Book House, Chennai, India.

Dhatchanamoorthi, A. (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Manikkavasagan, G. (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Mathaiyan, P. (2017) Tholkappiyam Porulathikaram, Paavai Pathippagam, Chennai, India.

Namakkal Kavignar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Padmadevan, (2013) Naladiyar Thelivurai, Karpagam Puthagaalayam, Chennai, India.

Subramaniyan, Sa.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License